IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**Pr.O.P.No. 79/2019**

சாட்சி : PW– 1

பெயர் : திருமதி. தவமணி தேதி : 15.09.2023

**குறுக்குவிசாரணை**:– ( எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

எனக்கு 2004ம் வருடம் திருமணம் நடைபெற்றது. என்கணவரின் ஊர் ஓமலூர். மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரி எனது நிரந்தர முகவரி. என் தாயார் பெயர் முத்துக்கண்ணு. என் தாயாரின் தங்கை சின்னக்கண்ணுவை என்தகப்பனார் 2ம் திருமணம் செய்துகொண்டார். என் தகப்பனாருக்கும் சித்தி சின்னக்கண்ணுவிற்கும் பிறந்தவர்கள்தான் எதிர்மனுதாரர்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்களும் அவரது தாயாரும் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் எதிர்மனுதாரர்கள் திருமணம் நடைபெற்றதால் வேறு இடத்தில் குடியிருக்கிறார்கள். சின்னக்கண்ணு மட்டும் மனு 1வது அயிட்ட சொத்தில் குடியிருக்கிறார்.

எதிர்மனுதாரர்கள் திருமணம் நடைபெறும் வரை மனு 1வது அயிட்ட சொத்தில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். நாங்களும் அங்குதான் குடியிருந்தோம். என்னையும் எதிர்மனுதாரர்களையும் எங்களின் தாயார்களையும் என் தகப்பனார்தான் பராமரித்து வந்தார். எங்களுக்கு என் தகப்பனார் செலவு செய்து திருமணம் செய்து வைத்தார். நான் B.Com பயின்றுள்ளேன். என்தகப்பனாருக்கு இறப்பதற்கு முன்பு 2 வருடங்களுக்கு முன்பு பெங்களூரில் உள்ள நாராயண கிருதயாலயா மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை நடைபெற்றது. அறுவை சிகிச்சைக்குப் பின்னர் என்தகப்பனார் தொடர்ந்து மேற்படி மருத்துவமனைக்கு சென்றுவந்தார்.

என் தகப்பனார் வீட்டில்தான் இறந்தார். என்தகப்பனார் இறப்பின்போது நானும் எதிர்மனுதாரர்களும் உடன் இருந்தோம். ஈமக்காரியங்களை நாங்கள் அனைவரும்

சேர்ந்துதான் செய்தோம். என்தகப்பனார் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே என்தாயார் இறந்துவிட்டார். என் சித்தி சின்னக்கண்ணு மனைவி என்ற முறையில் ஈமக்காரியங்கள் செய்தார்.

( வேண்டுகோளின்பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது )

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.